Volume 6 Issue 1 August 2024 E-ISSN: 2582-2063

# ஆற்றூர் நாட்டில் பெருங்கற்கால தடயங்கள்

**முனைவர். சி. மாணிக்கராஜ்,**
*உதவிப்பேராசிரியர்*
*சி.பி.ஏ. கல்லூரி, போடிநாயக்கனூர்*

**ஆ. கருப்பையா,**
*அரசு கள்ளர் உயர்நிலைப்பள்ளி*
*நெல்லூர், திண்டுக்கல்*

ஆற்றூர் நாடு என்பது பிற்கால பாண்டியர்கள் காலத்தில், பாண்டிய மன்னர்களால் நிறுவாக வசதிக்காக பிரிக்கப்பட்ட நாட்டுப் பிரிவுகளில் ஒன்றாகும். இப்பகுதியை சேதிராயர்கள் என்ற குறுநில மன்னர்கள் பாண்டியர்களுக்கு கட்டுப்பட்டு ஆட்சி செய்து வந்துள்ளனர். இந்நாட்டுப்பிரிவு இன்றைய திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் தாலுகாவிற்கு உட்பட்ட பகுதிகளை உள்ளடக்கியதாகும். ஆற்றூர் நாட்டின் மேற்குபகுதி மலையும் மலை சார்ந்த குறிஞ்சி நிலப்பகுதியாக இருப்பதால், அங்கு பெருங்கற்காலத்தைச் சேர்ந்த ஈமச் சின்னமான, கல்பதுக்கை, கல்வட்டம் மற்றும் முதுமக்கள் தாழிகளும் அதிகளவில் காணப்படுகின்றன.

தன்னுடன் வாழ்ந்த சக மனிதனின் மரணத்திற்குப் பின்பு, அவனுடைய உயிரற்ற உடலை அடக்கம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் முதன் முதலில் புதிய கற்கால மக்களிடம் தான் தோன்றியது என்பது வரலாற்று ஆய்வாளர்களின் கூற்றாகும். பின்பு இம்முறை வளர்ச்சி அடைந்து பெருங்கற்கால மக்களிடமும் பரவியது. வெறுமனே வளர்ச்சியடையாமல் இறந்தவர்களை அடக்கம் செய்து அவர்கள் நினைவாக அல்லது அடையாளமாக நினைவுச்சின்னம் எழுப்பும் வழக்கமாக தோன்றி வளர்ந்து வந்துள்ளது. இவை பெருங்கற்கால வரலாற்றில் மக்களின் நாகரீக வளர்ச்சியில் சிறப்பான வளர்ச்சியாகக் கருதப்படுகின்றது.

மனிதனின் மரணத்திற்குப் பின்னர் உடலிலிருந்து உயிர் பிரிந்து, உடல் அழிகிறது. மனிதனுக்கு மறுபிறப்பு உண்டு என்ற நம்பிக்கையின் அடிப்படையில், மறுபிறப்பு எடுக்கும் வரை அலைந்து திரியும் ஆன்மாவை, நிலையான ஒரு பொருளில் தங்க வைக்க எண்ணிய மனிதன் கற்களைப் பயன்படுத்தி நினைவுச் சின்னங்களை எடுத்து, அக்கற்களில் ஆன்மாவை புகுத்தி தங்க வைத்தனர். தமிழர்களிடமும் இறந்தோரை புதைத்து நினைவாக கல்நட்டு, தெய்வமாக வழிபடும் மூத்தோர் வழிபாடு அல்லது இறந்தோர் வழிபாடு உருவாகக் காரணமாக அமைந்தது என்பது வரலாற்று அறிஞர்களின் கூற்றாகும். இப்பண்பாட்டு வளர்ச்சியானது கி.மு.1000 முதல் கி.பி.100 வரை தமிழகத்தில் நடைமுறையில் இருந்து வந்துள்ளது என்பது ஆய்வுகளின் முடிவாகும். சவ அடக்கச் சின்னங்களை உருவாக்க பெரிய பெரிய கற்களை பயன்படுத்தியதனால் பெருங்கற்காலம் என்ற பெயர் உருவானதாக தொல்லியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

குறிஞ்சி, முல்லை சார்ந்த நிலப்பகுதியிலேயே அதிகளவில் பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் கிடைக்கின்றன. இதற்குக் காரணம் பெரும் பெரும் கற்கல் இப்பகுதியில் எளிதாக கிடைப்பதால் தான் என்றகருத்தும் ஆய்வுலகில் காணப்படுகிறது. தாழி வகையிலான ஈமச்சின்னங்கள் அதிகளவில் மருதநிலம் சார்ந்த பகுதியில் கிடைக்கின்றன. பெருங்கற்கால ஈமச் சின்னங்களை ஆய்வாளர்கள் கல்பதுக்கை, கல்திட்டை, கல்வட்டம்,ஈமப்பேழை, குத்துக்கல் அல்லது நெடுங்கல், முதுமக்கள் தாழி மற்றும் நடுகல் என வகைப்படுத்தி பிரித்துள்ளனர்.

மனிதன் இறந்த பின் அவனது ஆவி அல்லது ஆன்மாவிற்கு உயிர்வாழக் கூடிய சக்தி உண்டு என்ற நம்பிக்கையில் இம்மாதிரியான ஈமச்சின்னங்களை உருவாக்கி அவற்றில் ஆன்மாக்களைதங்க வைத்துள்ளனர். இறந்த ஆன்மாவை வழிபட்டால் குழுவின் இன விருத்திக்கும், வேட்டைத் தொழிலுக்கும் துணை நிற்கும் என்ற நம்பிக்கையில் பெருங்கற்கால மக்கள் இறந்தவரின் ஆன்மாவை வழிபட்டுள்ளனர் என்பதை பல ஆய்வுகள்

வெளிக்காட்டுகின்றன. இவற்றுடன் சடங்குகள் செய்து ஆன்மாவை மகிழ்வித்தால் பல நன்மைகள் செய்யும் என்ற நம்பிக்கையும் இருந்துள்ளது. இத்தகைய பெருங்கற்காலப் பண்பாடுகள் கர்நாடகப் பகுதியிலிருந்து தமிழகத்திற்கு பரவியதாக வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன.

**கல்பதுக்கை (Slab List)**

கல்பதுக்கை என்பது மலையும் மலை சார்ந்த இடங்களின் தரையின் கீழ்ப்பகுதியில் சதுரம் அல்லது செவ்வக வடிவில் குழியை தோண்டி அமைக்கப்படும் பெருங்கற்கால மக்களின் கல்லறை வகைகளில் ஒன்றாகும். இயற்கையாக கிடைத்த கற்பலகைகள் அல்லது செயற்கையாக செதுக்கப்பட்ட கற்பலகைகளைக் கொண்டு நிலத்தில் தோண்டிய குழியில் நான்கு பக்கங்களிலும், நான்கு கற்பலகைகளை வைத்து கல்லறையை உருவாக்கி விடுவர். பின்னர் கல்லறையின் மேல் பகுதியில் பெரிய பலகைக் கல்லைக் கொண்டு மூடியும் விடுவர். பலகைக் கற்கள் சாய்ந்து விடாமலிருக்க ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டிருக்கும். கற்பலகைகளின் முனைகள் நான்கு பக்கங்களிலும் நீட்டி, நிறுத்தப்பட்டிருக்கும் இதைப் பார்ப்பதற்கு “ஸ்வஸ்திகா” வடிவில் காட்சியளிக்கும்.

கல்லறையின் உட்பகுதியில் இறந்த மனிதனின் எலும்புகள், படையல் பொருட்களுடன் அவர்கள் பயன்படுத்திய பொருட்களையும் வைப்பர். சில இடங்களில் முதுமக்கள் தாழியில் இறந்தவரின் உடலை அல்லது எலும்புகளை வைத்தும், அவர்கள் பயன்படுத்திய சிறிய மட்கலங்கள், இரும்புப் பொருட்கள், மணிகள் போன்றவற்றை வைத்து புதைப்பர். பின்னர் மண் மற்றும் சிறிய கற்களைக் கொண்டு மூடி அதைச் சுற்றியும், சிறிய பெரிய உருண்டையான அல்லது வடிவமற்ற கற்களை வட்டமாக வைத்து பாதுகாப்பர். இவ்வாறு வைப்பது என்பது மழைக்காலங்களில் வெள்ளத்தால் ஏற்படும் மண்அரிப்பைத் தடுக்கும் நோக்கமாக இருக்கலாம் அல்லது அடையாளப்படுத்துவதற்காக வைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

**கோம்பைக்காடு கல்பதுக்கைகளின் அமைப்பு:**

திண்டுக்கல் மாவட்டம், சித்தையன் கோட்டை பேரூராட்சிக்கு உட்பட்ட நரசிங்காபுரம் எனும் கிராமத்திற்கு மேற்கே உள்ள மலையடிவாரப் பகுதியில் இப்பகுதி மக்களால் புனல்காடு, பிணக்காடு, கோம்பைக் காடு என்ற பெயர்களில் அழைக்கப்படும் நிலப் பகுதியில் பெருங்கற்காலத்தைச் சேர்ந்த ஈமச்சின்னமான கல்பதுக்கைகள் ஐந்து காணப்படுகின்றன.





கோம்பைக்காடு பகுதியில் காணப்படும் ஐந்து கல்பதுக்கைகளும் நீள் செவ்வக வடிவில் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கல்பதுக்கைகளிலும் மேற்கு கிழக்காக பலகைக் கற்களை செவ்வக வடிவில் பாதி மண்ணில் புதைந்தும், பாதி மண்ணிற்கு வெளியே தெரியும்படி நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. இங்கு காணப்படும் ஐந்து கல்லறைகளிலும் மூடுபலகைக் கற்கள் இல்லை. பிற்காலங்களில் இந்நில உரிமையாளர்கள் அல்லது யாரேனும் அவற்றை எடுத்துச்

சென்றிருக்கலாம். ஐந்து கல்லறைகளில் ஒன்றில் மட்டும் குறுக்குச்சுவர் போன்று பலகைக் கல்லை வைத்து நான்கு அறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நான்கு அறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ள கல்லறை ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்காக எடுக்கப்பட்டவையாக இருக்கலாம் அல்லது இனக்குழு சண்டையில் இறந்துபட்ட ஒரே இனத்தைச் சேர்ந்த வீரர்களுக்காக உருவாக்கப்பட்டவையாக இருக்கலாம்.

ஒவ்வொரு கல்லறையின் மையப்பகுதியிலிருந்து சுற்றிலும் 5 மீட்டர் சுற்றளவில் இப்பகுதியில் கிடைத்த இயற்கையான சிறிய பெரிய உருண்டையான கற்களைக் கொண்டு வட்டமாக வைத்துள்ளனர். இவை பார்ப்பதற்கு கல்வட்டம் போன்ற அமைப்பில் காட்சியளிக்கிறது.

**கல்வட்டம் (Cairn Circle)**

கல்பதுக்கைகளின் அமைப்பைப் போன்றே தரையின் கீழ்ப் பகுதியில் குழியைத் தோண்டி, நான்கு பக்கமும் பலகைக் கற்களை செங்குத்தாக ஒன்றுடன், ஒன்று இணைத்து சதுரம், நீள் சதுரம் அல்லது செவ்வக வடிவத்தில் கல்லறை அமைக்கப்படும். பின்னர் இறந்த மனிதனின் சாம்பல் அல்லது எலும்புகள், தாழிக்குள் வைத்து, அவற்றுடன் ஈமப் பொருட்களை இணைத்து வைத்து மூடுபலகை எனும் ஒரு பலகைக் கல்லால் மூடி மேல்பகுதியில் மண்கற்கள் கொண்டு மூடிவிடுவர். இக்கல்லறையைச் சுற்றி இயற்கையான அல்லது செயற்கையான உருண்டை வடிவமுடைய அல்லது சீரற்ற வடிவமுடைய பெரிய கற்களை பாதியளவு தரைக்கு மேல் தெரியும்படி அடுக்கி வைத்து அடையாளப்படுத்துவர். இப் பெருங்கற்கால கல்லறை அமைப்பே கல்வட்டம் என அழைக்கப்படுகிறது. இத்தகைய நினைவுச் சின்னங்களுக்கு முதன் முதலில் ராபர்ட் புரூஸ்புட் என்பவர் கி.பி.1901 கல்வட்டம் எனப் பெயரிட்டார்.

**கொம்மங்கரடு கல்வட்டங்களின் அமைப்பு**

நரசிங்கபுரம் எனும் கிராமத்திற்கு மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது கொம்மங்கரடு. இக்கரட்டை ஒட்டி தெற்குப் பக்கமாக உள்ள தரிசு நிலம் ஒன்றில் பத்திற்கு மேற்பட்ட பெருங்கற்காலத்தைச் சேர்ந்த கல்லறை அமைப்புகளில் ஒன்றான கல்வட்டங்கள் காணப்படுகின்றன. இவற்றில் ஐந்து கல்வட்டங்கள் மட்டுமே நல்ல நிலையில் உள்ளது. மற்றவை சிதைக்கப்பட்டு இருந்ததற்கான சுவடுகள் மட்டுமே தென்படுகிறது. ஒவ்வொரு கல்வட்டத்தின் மையத்திலிருந்தும் 5மீட்டர் சுற்றளவில் சீரற்ற சிறிய, பெரிய உருண்டையான கற்களை பாதி மண்ணில் புதைத்து வட்டமாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

கல்வட்டத்தின் நடுவில் கற்பதுக்கைகளில் காணப்படும் கல்லறை அமைப்புகள் இன்றி வெறும் கல்வட்டங்கள் மட்டுமே உள்ளன. இக்கல்வட்டங்களின் அடியில் பலகைக் கற்களைக் கொண்டு சதுரம், செவ்வக வடிவிலான கல்லறைகள் அமைக்கப்பட்டிருக்கும் அல்லது முதுமக்கள் தாழிகளுடன் பிற ஈமப்பொருட்கள் வைக்கப்பட்டு மூடப்பட்டிருக்கலாம். அகழாய்வு செய்தால் மட்டுமே உட்பகுதியில் உள்ள கல்லறை அமைப்பை அறிய முடியும்.



பெருங்கற்காலத்தில் மக்கள் தங்கள் வாழ்விடப் பகுதியின் அருகிலேயே, தங்களோடு வாழ்ந்து மறைந்தவர்களுக்கான கல்லறைகளை அமைத்தனர் என்பது வரலாற்றுச் செய்தியாகும். அதைப்போல் கொம்மங்கரட்டைச் சுற்றி வாழ்ந்த மக்கள் இக்கல்வட்டக் கல்லறைகளை அமைத்திருக்கலாம். தமிழகம் உட்பட பிற மாநிலங்களிலும் இதுவரை தனியாக ஒரு பெருங்கற்கால கல்லறை மட்டும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஒரே இடத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட கல்லறைகள் தான் கண்டறியப்பட்டுள்ளன. இங்கும் பத்திற்கு மேற்பட்ட கல்வட்டங்கள் ஒரே இடத்தில் உள்ளன.

புதிய கற்காலம் முதல் பெருங்கற்காலம் வரையிலான மக்கள் கொம்மங்கரட்டை சுற்றி வாழ்ந்துள்ளனர். இவர்கள் தங்கள் இருப்பிடங்களை விட மாண்டவர்களுக்கான கல்லறைகளை அமைப்பதில் நல்ல பண்பாடும், நாகரீக வளர்ச்சி பெற்றிருந்தனர் என்பதற்கு இக்கல்வட்டங்கள் சான்றாகின்றன.

## முதுமக்கள் தாழி (Burial urn)

பெருங்கற்கால மக்கள் இறந்தவர்களை அடக்கம் செய்வதற்கு கல்பதுக்கை, கல்வட்டம், கற்குகை, கல்திட்டை, குத்துக்கல்,ஈமப்பேழை போன்றவற்றோடு முதுமக்கள் தாழி எனும் ஒரு வழக்கத்தையும் அறிந்திருந்தனர். பொதுவாக தமிழகத்தில் பெருங்கற்காலம் என்பது கி.மு.1000 முதல் கி.பி.300வரை தான் என ஆய்வாளர்கள் தீர்மானித்துள்ளனர். கி.மு.1000க்கு முன்பிருந்தே மக்கள் இறந்தவரை அடக்கம் செய்யும் முறையை அறிந்திருந்தாலும்,கி.மு.800ல் தான் நல்ல வளர்ச்சியைப் பெற்றிருந்தது என்பது

தமிழகத்தில் நடத்தப்பட்ட பல அகழாய்வுகளில் கிடைத்த முதுமக்கள் தாழிகள் தொடர்பான ஆய்வுகள் கூறுகின்றன. இறந்தவர்களை தாழியில் வைத்து அடக்கம் செய்யும் முறைதான்

பெருங்கற்காலத்தில் வாழ்ந்த மக்கள் முதன் முதலில் அறிந்த சவஅடக்க முறையாகும் என்ற கருத்தும் ஆய்வுலகில் உள்ளன. அதைப்போல் புதிய கற்கால மக்களிடம் தான் தாழியில் இறந்தவரை வைத்து அடக்கம் செய்யும் முறை தோன்றி வளர்ந்தது என்ற கருத்தும் ஆய்வாளர்களிடம் காணப்படுகின்றன. தொல் பழங்கால மக்கள் இறந்தவர்களை புதைக்க பயன்படுத்திய ஒரு வகையான மட்கலனை தான் முதுமக்கள்தாழி என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. புதைகலன்,ஈமத்தாழி,ஈமப்பேழை, மதமதக்காசால், பிணத்தாழி, புதைத்தாழி, பிணஞ்சுடு சாம்பற் கொள்கலம் என்ற வேறு பெயர்களிலும் குறிப்பிடப்பட்டதை இலக்கியங்களும், பிற வரலாற்றுச் சான்றுகளும் சுட்டிக்காட்டுகின்றன.

வயதில் முதிர்ந்த அல்லது மூத்தவர்கள் இறந்த பின்பு அவர்களை தாழியில் வைத்து அடக்கம்

செய்தமையால் முதுமக்கள் தாழி என்ற பெயர் ஏற்பட்டுள்ளது என்ற கருத்தும் வரலாற்றுலகில் உள்ளது. தாழி என்றால் அகன்ற வாயுடைய மண் பானை அல்லது வாயகன்ற பெரிய மண்பானை மற்றும் பெரிய சாடி என்ற பொருள்கள் கூறப்படுகின்றது. பண்டையக்கால மனிதன் தண்ணீருக்காக ஆறுகளின் அருகில் குடியேறி பின்னர், அந்நீரைப் பயன்படுத்தி தனக்கு தேவையான உணவுப்பொருட்களை விவசாயம் செய்து பெற்று வாழ்ந்து வந்தான். இக்கால கட்டத்தில் தான் இறந்தவர்களை தாழியில் வைத்து அடக்கம் செய்யும் வழக்கத்தையும் அறிந்தான் என்பதை ஆற்றுச் சமவெளிகளில் கண்டறியப்பட்ட முதுமக்கள் தாழிகள் சான்றளிக்கின்றன. இவற்றிற்கு சான்றாக ஆதிச்சநல்லூர், கொடுமணல், அழகன்குளம், அரிக்கமேடு, கீழடி, மாங்குடி, கொற்கை, அகரம் மற்றும் சிவகளை போன்ற நீர்நிலை ஒட்டிய இடங்களில் நிகழ்த்திய அகழாய்வில் கிடைத்த முதுமக்கள் தாழிகள் தொடர்பான ஆய்வுகளை கூறலாம்.

இதைப்போல் தமிழகத்தில் மலையும் மலை சார்ந்த பகுதிகளில் மக்கள் குடி அல்லது குழுவாக வாழ்ந்த காலத்தில் இறந்தவர்களை அடக்கம் செய்வதற்கு தாழிகள் பயன்படுத்தியுள்ளனர். இதற்குச் சான்றாக அப்பகுதிகளில் கிடைக்கும் பெருங்கற்கால ஈமச்சின்னங்களான கல்வட்டம், கல்பதுக்கை, குத்துக்கல் போன்றவற்றில் நடத்திய அகழாய்வில் முதுமக்கள் தாழிகள் கிடைத்திருப்பதை சுட்டிக்காட்டலாம். பெருங்கற்காலத்திற்கு முன்பே தோன்றி, காலம் காலமாக வளர்ந்து வரும் ஒரு பண்பாட்டு மரபு முறையாக இறந்தவரை வணங்கும் மூத்தோர் வணக்கம் எனும் மூத்தோர் வழிபாட்டு முறை உள்ளது. இவற்றின் எச்சங்கள் தான் பெருங்கற்காலத்தைச் சேர்ந்த ஈமச்சின்னங்களாகும் என்பதை மானிடவியல் சார்ந்த ஆய்வுகள் வெளிக்காட்டுகின்றன.

**ஆற்றூர் நாட்டில் முதுமக்கள் தாழி :**

ஆற்றூர் நாடு மலையும் மலை சார்ந்த பகுதியாக இருப்பதால், வற்றாத நீர் வளமுடைய மருதாநதி, குடகனாறு என்ற இரு ஆறுகள் ஓடுகின்றன. அவ்விரு ஆறுகளின் அருகில் முதுமக்கள் தாழிகள் காணப்படுகின்றன.

ஆற்றூர் நாட்டு எல்லைக்கு உட்பட்ட அய்யம்பாளையம் என்ற ஊரின் வடக்கு பகுதியில் ஓடும் மருதாநதியின் அருகிலுள்ள நீர் ஓடையின் கரைகளில் முதுமக்கள் தாழிகள் மண் அரிப்பின் காரணமாக பாதி உடைந்த அல்லது உடைக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. இங்கு உள்ள தாழிகளின் வாயின் விளிம்புகள் தடித்து அகன்று விரிந்து காணப்படுகிறது. தாழியின் உடல் அமைப்பு வட்டமான அமைப்பில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. தாழி செய்து நெருப்பில் சுடுவதற்கு முன்பு, கழுத்துப் பகுதியை சுற்றி கைவிரல் பதிவுகளை அழுத்தி அலங்காரம் செய்யப்பட்டுள்ளது. தாழியின் உட்பகுதியில் சிறிய மட்பாண்டங்கள் உடைந்த நிலையில் கிடைக்கின்றன. தாழியை மூடுவதற்கு பெரிய பலகைக் கற்கள் பயன்படுத்தியதை அங்கு கிடக்கும் பலகைக் கற்கள் மூலம் அறியலாம். இத்தகைய தாழிகள் இறந்தவர்களின் எலும்புகள் அல்லது எரித்தபின் கிடைக்கும் சாம்பல்களையும், பிற ஈமமட்கலன்களையும் வைத்து புதைப்பதற்குப் பயன்படுத்தும் வகையுடையதாகும். தாழிகளின் வண்ணம் சாம்பல் நிறமுடையதாக காணப்படுகின்றது.





ஆத்தூர் குட்டிக்கரடு என அழைக்கப்படும் பகுதியில் உள்ள குடகனாற்றின் கரையில் கொடுமணல், ஆதிச்ச நல்லூர் போன்ற இடங்களில் கிடைத்த முதுமக்கள் தாழியின் அமைப்பைப் போன்ற தாழி ஒன்று பாதி உடைந்த நிலையில் கண்டறியப்பட்டது. தாழியின் கழுத்துப் பகுதியில் கயிற்றின் முடிச்சு போன்ற அலங்காரம் வரையப்பட்டிருக்கின்றது. இத்தாழி குதிர் போன்ற தோற்றத்தில் மண்ணில் செங்குத்தாக புதைக்கப்பட்டிருந்தது. இத்தகைய வடிவமுடைய தாழிகள் இறந்தவரின் உடலை உள்ளே வைத்து புதைப்பதற்கு பயன்படும் புதைகலன் போன்று உள்ளது. இறந்தவரை புதைப்பதற்கு என்று தனிப்பட்ட வகையில் வடிவமைக்கப்பட்ட தாழி போன்று காணப்படுகிறது.



ஆற்றூர் நாட்டில் காணப்படும் முதுமக்கள் தாழிகளின் அமைப்பு, இப்பகுதியில் பெருங்கற்கால மக்களின் வளர்ச்சி நிலைகளை காட்டும் விதமாக உள்ளது.

பெருங்கற்கால காலகட்டத்தில் இப்பகுதியில் மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதையும் அவர்கள் சிறப்பான பண்பாட்டு மரபையும், நாகரீக வளர்ச்சியையும் பெற்றிருந்தனர் என்பதை இங்கு காணப்படும் பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் வழியாக அறியலாம். மேலும் இவை காலம் காலமாக அம்மக்களைப் பற்றிய செய்திகளைச் சொல்லிக் கொண்டே நிற்கும். அழியா நினைவுச் சின்னமாகவும் உள்ளன.

**துணை நின்ற நூல்கள்:**


1. தி. சுப்பிரமணியன் -தமிழகத் தொல்லியலும் வரலாறும் (தகடூர் பகுதி)
2. தி. சுப்பிரமணியன் -தொல் பழங்காலம்
3. தி. சுப்பிரமணியன் -தமிழகத்தில் பெருங்கற்காலப் பண்பாடு
4. சி. இளங்கோ -தமிழகத் தொல்லியல் ஆய்வுகள் கீழடி வரை
5. கு. தாமோதரன் -தொல்லியல் நோக்கில் தமிழகம்
6. ந. வெங்கடேசன் -வரலாற்றில் அரிக்கமேடு
7. நடன. காசிநாதன் -தமிழக வரலாற்றுத் தடயங்கள்
8. கே.வி.ராமன் -தொல்லியல் ஆய்வுகள்
9. ஏ.வி. சுப்பிரமணிய ஐயர் -பண்டைத் தமிழ்நாடு
10. கா. ராஜன் -தொல்லியல் நோக்கில் சங்க காலம்
11. தமிழ்நாட்டு வரலாறு தொல்பழங்காலம், தமிழ்நாடு அரசு வெளியீடு